நாள்: 27.01.2026
SC 129/2021
பெயர் பூங்கொடி
PW3

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்</u>

வழக்கு சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல. என் கடை முன்னால் தான் நடைபெற்றது. சம்பவம் நடைபெற்றபோது நிறைய நபர்கள் இருந்தார்கள் எத்தனை நபர்கள் என்றால், 10 நபர்கள் இருந்திருப்பார்கள். அவர்கள் சம்பவத்தை பார்ர்த்தார்கள். அந்த 10 நபர்களும் சண்டையை விலக்கிவிட்டார்கள். நான் கூட்டத்தை விலக்கி பார்த்தபோது நல்லதம்பி காயத்தோடு இருந்தார். ஒருமுறை தான் ராஜா அருவாளை கொண்டு அ.சா.1 நல்லதம்பியை வெட்டினார். அப்போது நல்லதம்பி கையால் தடுத்துக்கொண்டார். அவர் கையில் இருந்த காயத்தை நான் பார்க்கவில்லை. ஆனால், காயம் ஏற்பட்டது. அதனால் சம்பவ இடத்திலும், அவரது உடையிலும் இரத்த கறை இருந்தது. அவர் சட்டை சண்டையில் கிழிந்திருந்தது. சம்பவ இடத்தில் என்னை தவிர யாரும் இல்லை என அ.சா.1 சொல்லியிருந்தால் அது தவறு தான். அ.சா.1 ஐ, எதிரிகள் காலை பிடித்து என் கடையில் இருந்து பக்கத்து கடை வரை சுமார் 10 அடி தூரம் வரை இழுத்தார்கள். இழுத்ததனால் அவருக்கு காயங்கள் ஏற்பட்டது. சாட்சி நல்லதம்பி கூடலூர் நகராட்சி கவுன்சிலர். நாங்கள் குடியிருக்கும் பகுதிக்கும், சம்பவ நடந்த இடத்திற்கும் அவர் தான் கவுன்சிலராக இருந்தார். நானும், எதிரிகளும் குடியிருந்த வீடுகளின் நிலம் அரசாங்க புறம்போக்கு நிலம் என்றால் சரிதான். அந்த இடத்தில் காவல் நிலையம் கட்டவேண்டும என அரசாங்கம் முதலில் நடைவெடிக்கை எடுத்தார்கள்., அதன் பின்னர் குடியிருப்பு வீடுகள் கட்டவேண்டும் அ.சா.1 நல்லதம்பியிடம் பொறுப்பை ஒப்படைத்தார்கள். வீடு கட்டுவதற்கு அவர் ஒப்பந்தம் எதுவும் எடுக்கவில்லை.

வீடு இல்லாதவங்களும், அங்கு குடியிருந்தவர்களுக்கும், அடுக்குமாடி குடியிருப்பு கட்டப்பட்டது. அடுக்குமாடி குடியிருப்புக்கு அருகில் தனியாக 4, 5 தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டு அதில் ஒரு வீடு எங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது என்றால் சரிதான். எனக்கு அடுக்குமாடி குடியிருப்பில்தான் வீடு ஒதுக்கீடு செய்யப்பட்டது என்றும், நல்லதம்பி அவர் செல்வாக்கை பயன்படுத்தி எனக்கு தனியாக இருந்த தொகுப்பு வீட்டில் எனக்கு வீடு பெற்றுத்தர சட்ட முரணாக முயற்சி செய்தார் என்றும்,

அதை எதிரிகள் தட்டிக்கேட்டதால் எதிரிகளை பணிய வைக்கவேண்டும் என்பதற்காக அ.சா.1 இருசக்கர வாகனத்தில செல்லும்போது கவனக்குறைவாக ஓட்டி கீழே விழுந்து ஏற்ப்ட்ட காயத்தை வைத்து கொடுத்த பொய்யான புகாரை அவருக்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் அடித்தததால் தான் காயம் ஏற்பட்டது. நான் காயம் பட்ட நல்லதம்பியுடன் காவல்நிலையத்திற்கோ, மருத்துவமனைக்கோ சரியல்ல. என் மாமா பாண்டி சென்றார். என் மாமா பாண்டி மருத்துவமனை செல்லவில்லை என்றும், நான் பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல நல்லதம்பி சம்பவம் நடந்த பின்னர் அரிவாளை என்னிடம் ஒப்படைத்து சென்றார் என்றாலும், அதன் பின்னர் நான் போலீசாரிடம் ஒப்படைத்து விட்டேன் என்று அவர் சாட்சியத்தில் சொல்லிருந்தால் அது தவறு தான். அரிவாளில் இரத்தகறை இருந்தது. அரிவாளின் நீளம், அகலம், உயரம் தெரியாது. சம்பவம் நடைபெற்ற இடத்தில் நல்லதம்பிக்கு வீடு, கடை எதுவும் இல்லை. நான் சொல்வது போல் சொன்னநேரத்தில், சொன்ன தேதியில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், அ.சா.1 கேட்டுக்கொண்டதற்கினங்க அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. காயம் பட்டவருக்கு நான் சொல்வது போல் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை என்றும், வழக்கு சொத்தாக அரிவாள் என் முன்பு கைபற்றவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், வழக்குக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

(ஓம்.) M.சிவாஜி செல்லையா
சார்பு நீதிபதி
உத்தமபாளையம்